தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1968 ஆகஸ்ட் 21.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 61, 62, 63, 64 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Posts of Craft Instructors in schools

*65 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal for the abolition of the posts of Craft Instructors in Secondary and Elementary Schools in Madras State ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : துணைச் சபாநாயகர் அவர்களே, 1967-ல் இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்பு ஏதாவது தமிழகப் பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா ? அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்து கொடுக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இதுமாதிரி கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்களுக்கு முன்பு ஒரு வாரத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த பீரியட்களைக் குறைத்து பாதியாக்கியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் பொதுவாகக் குறைக்கப்படவில்லை. 1-வது முதல் 3-வது வகுப்பு வரை 7 பீரியட்டுகளும், 4-வது முதல் 8-வது வரை 4 பீரியட்டுகளும், 9-வதிலிருந்து மூன்று பீரியட்டுகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு 40 பீரியட்டுகளாக இருந்ததை 30 பீரியட்டுகளாக ஆக்கவேண்டுமென்று தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 9-வது வகுப்புத் தவிர மற்றவைகளெல்லாம் ஏற்கெனவே இருந்தவைதான் இருந்து வருகின்றன.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கைத் தொழில் ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக கருதப்பட்டு குறைந்த சம்பளம் மாதம் 30 ரூபாய் என்ற அளவில்தான் கொடுக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை முழுநேர ஆசிரியர்களாக ஆக்கி முழுச் சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கைத்தொழில் ஆசிரியர்களுக்கு இருக்கும் நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்துத் தானே அவர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டி ருக்கிறார்கள். அவர்களுக்கு முழு நேரம் கொடுத்தால் அதற்குத் தகுந்தவாறு நேரம் ஒதுக்கவேண்டிய சங்கடம் இருக்கிறது. இதிலே என்னென்ன மாற்றம் செய்யலாம் என்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்துவருகிறது.

திரு. எஸ். முருகையன் : உயர் துவக்கப்பள்ளிகளில் கைத் தொழில் ஆசிரியர்களாக வேலைபார்ப்பவர்களை அந்தப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாறும்போது, அவர்களைப் பல இடங்களில் எடுத்துக்கொள்வது கிடையாது. அவர்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ள அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர் துவக்கப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுகின்ற போதும் கைத்தொழில் ஆசிரியர்கள் அப்படியேதான் வைக்கப்படு வார்கள். அவர்கள் ஒதுக்கப்பட்டதற்கு வேறு காரணங்கள் இருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது சரியா, தவறு என்று ஆராயப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்கள் பார்ட் டைம் வேலைக்கு வரமாட்டேன் என்கிறார்கள், சம்பளம் அவர்களுக்குக் கட்டவில்லை என்ற காரணத்தால், கைத் தொழில் ஆசிரியர்கள் இல்லையென்றால், 6, 7, 8 வகுப்புகளுக்கு அங்கீகாரம் அளிப்பதில்லை. ஆகையால் கைத்தொழில் ஆசிரியர் கள் இல்லாவிட்டாலும் 6, 7, 8 வகுப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முழுநேர ஊதியம் இருந்தால்தான் வாழமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இங்கே பகுதி நேர ஆசிரியர்களை வைத்துக் கொள்ளக்கூடிய அளவிலேதான் நிதிநிலைமையும் மற்றவைகளும் இருக்கின்றன. முழுநேர ஆசிரியர்களாக ஆவதற்கு என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதுபற்றி கல்வித் துறை யினர் ஆராயவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த முடிவு ஏற்றதற்குப் பிறகு தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. போஜன் : நம் மாநிலத்திலுள்ள உயர்நிலைப்பள்ளி களிலும் தொடக்கப்பள்ளிகளிலும் சில இடங்களில் கைத் தொழில் பயிற்சிக்குப் பதிலாக விவசாயப் பயிற்சி கொடுக்கப்

1968 ஆகஸ்ட் 21]

படுகிறது. சில இடங்களில் கைத்தொழில் பயிற்சி கொடுக்கப் படுகிறது. விவசாயம், கைத் தொழில் இரண்டு பயிற்சிகளும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கிராப்ட்ஸ் ஆகிய வற்றின்கீழ் இந்த பலவகையான தொழில்கள் ஒதுக்கப்பட்டி ருக்கின்றன. எந்தெந்த இடத்திலே எவை எவை செய்தால் பயன்தரும் என்ற முறையில் செய்யப்படுகிறது. ஓவியம் செய்தல், வண்ணம் தீட்டுதல், தோட்டக்கலே, இசை, நூற்புத் தொழில், தச்சு வேலே, கருமான் வேலே இதுபோன்ற துணைத்தொழில்கள் விவசாயம் உள்பட இருக்கின்றன. சில இடங்களில் இடம் இருக் கின்ற காரணத்தினல், விவசாயம் நடத்தப்படுகிறது. சில இடங்களில் தச்சுவேலே, நூற்றலும் நெய்தலும் போன்ற வேலேகள் நடத்தப்படுகின்றன. மற்றவைகளைவிட விவசாயத்திற்கு முக்கியத் துவம் செலுத்தினல் நல்லது என்று தெரிவிக்கப்பட்டது. அது ஆராயப்பட்டுவருகிறது.

THIRU K. VINAYAKAM : Does the Government continue to believe in craft instruction based upon the basic type of education or does the Government believe that the money spent upon craft instruction is a criminal waste and it is a case of good money spent upon bad business ? What is the change which the Government have effected after it has come into power in regard to craft instruction ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலேவர் அவர்களே, முன்பு ஆதாரக் கல்வி என்ற முறையில் இருந்தது. அதைப் புகுத்தியவர்களே நடைமுறையில் கொண்டுவருவதற்கு முன்வர வில்லே. அதனல்தான் அந்த நோக்கத்தைமட்டும் ஏற்று நடத்த லாம் என்ற முறையிருக்கிறது. ஓர்க் எக்ஸ்பீரியன்ஸ் என்ற கொள்கை அடிப்படையில் கைகளும், கால்களும் பயன்படுத்தப்படு கின்ற அளவிற்கு பள்ளிப் பருவ காலத்திலே பயிற்சி தரவேண்டு மென்ற அடிப்படையிலேதான் கிராப்ட்ஸ் பயிற்சி வகுக்கப்பட் டிருக்கிறது. வேலேசெய்கின்ற மனப்பான்மை அந்தப் பருவத்திலே ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் பிற்காலத்தில் மனத் துணிவும் ஏற்படும் என்ற வகையில் அது வகுக்கப்பட்டிருக்கிறது. நோக்கம் தவறு என்று சொல்லமாட்டேன். நோக்கம் சரியானது தான், நிறைவேற்றுவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. பள்ளி களேப் பார்த்தால் எல்லாமே அறையிலே போட்டு மூடி பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது அது வேஸ்ட் என்று சொல்லலாம். ஆனல் அதைப் பயன்படுத்துகின்ற நிலேமை யில்தான் உண்மையான நோக்கம் நிறைவேறும். இதுபற்றி ஆராயப்பட்டு வருகின்றது. ஓர்க் எக்ஸ்பீரியன்ஸ் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளே மேற்கொள்ளும்.